## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
## ந.க.எண்.3451/ஆ5/2024, நாள்.02.12.2024

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2024–2025 மன்ற செயல்பாடுகள் – 03.12.2024 அன்று நடைபெறுவதாக இருந்த வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிகள் 07.01.2025 அன்று நடைபெறும் – வட்டார அளவில் நடைப்பெற்ற இலக்கிய மன்றம் போட்டிகள் மற்றும் பள்ளி அளவில் நடைப்பெற்ற வினாடி வினா மன்றம் போட்டிகள் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய – வழிமுறைகள் – தொடர்பாக

பார்வை

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.06673/எம்1/எஸ்1 /2024, நாள். .10.2024
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 066737 /எம்1/எஸ்1/2024, நாள்.07.11.2024
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 12.11.2024
4. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) கடித ந.க.எண்.066737/எம்1/எஸ்1/2024, நாள். 25.11.2024
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 28.11.2024
6. சென்னை –6 பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டுநலப் பணித் திட்டம்) கடித ந.க.எண்.0066737/எம்1/எஸ்1/2024, நாள். 29.11.2024

•••••

பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி 6 முதல் 9ம் வகுப்புகளுக்கான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றம் பள்ளி அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றியாளர்கள் விவரங்கள் EMIS தளத்தில் பதிவு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் அரசு பள்ளிகளில் பள்ளி அளவிலான இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வட்டார அளவிலான போட்டி நடத்திட தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி 19.11.2024 (செவ்வாய்கிழமை) அன்று வட்டார அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டது. 03.12.2024 (செவ்வாய் கிழமை) அன்று படி வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிகள் நடைபெறும் என பார்வை 5–ன் இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பார்வை 6-ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப் பணித்திட்டம்) கடிதத்திற்கிணங்க, 03.12.2024 அன்று நடைபெறவிருந்த வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டியானது 07.01.2025 அன்று கீழ்காணும் அட்டவணையின்படி நடைபெறும் என அனைத்து அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வட்டார அளவிலான வினாடி மன்றப்போட்டிகள்<br>நடைபெறும் நாள். – 07..01.2025 (செவ்வாய்கிழமை) நேரம் – காலை 9.30 மணி | | |
|---|---|---|
| வ. எண். | ஒன்றியம் | போட்டி நடைபெறும் இடம் |
| 1 | வேலூர் புறநகர் | ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி, வேலூர். |
| 2 | வேலூர் நகர் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர் |
| 3 | அணைக்கட்டு | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு |
| 4 | கணியம்பாடி | அரசு மேல்நிலைப் பள்ளி, கணியம்பாடி |
| 5 | காட்பாடி | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி |
| 6 | கே.வி. குப்பம் | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கே.வி. குப்பம் |
| 7 | குடியாத்தம் | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நடுப்பேட்டை, குடியாத்தம் |
| 8 | பேர்ணாம்பட்டு | இஸ்லாமியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பேர்ணாம்பட்டு |

<u>வினாடி வினா மன்றம் –</u>

பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிகள் 04.11.2024 முதல் 06.11.2024 வரை நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் 08.11.2024-க்குள் EMIS தளத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டியில் பங்கேற்பது மிகவும் குறைவாக காணப்படுவதால், பள்ளி அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிக்கான EMIS தளத்தில் 04.12.2024 வரை மீண்டும் திறக்கப்படும் எனவே, இதுவரை வினாடி வினா போட்டிகளை முடிக்காத பள்ளிகள் அவற்றை முடித்து பங்கேற்பாளர்கள் மற்றும் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்களை 04.12.2024-க்குள் EMIS தளத்தில் உள்ளீடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிகள் நடைபெறுவதற்கான அட்டவணை

| | |
|---|---|
| வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டி நடைபெறும் தேதி | 07.01.2025 (செவ்வாய் கிழமை) |
| EMIS தளத்தில் வட்டார அளவில் வெற்றியாளர் தரவை உள்ளீடு செய்ய கடைசி தேதி | 08.01.2025 (புதன்கிழமை) |

**இலக்கிய மன்றப் போட்டிகள் –**

வட்டார அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகளின் வெற்றியாளர்கள் விவரங்கள் EMIS தளத்தில் பதிவு செய்வதற்கான கடைசி தேதி 02.12.2024 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த வட்டார அளவிலான இலக்கிய மன்றப் போட்டிகளின் வெற்றியாளர்களின் விவரங்கள் 02.12.2024–க்குள் EMIS தளத்தில் முடிக்கப்படுவதை உறுதி செய்து அதன் விவரம் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க மாவட்டக் கல்வி அலுவலக (இடைநிலைக் கல்வி) பள்ளித் துணை ஆய்வாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

அரசு பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 03.12.2024 **அன்று நடைபெறவிருந்த வட்டார அளவிலான வினாடி வினா மன்றப் போட்டியானது 07.01.2025 அன்று நடைபெறும் என அனைத்து அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளி** தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு(இடைநிலை / தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது

இணைப்பு – பார்வை 6–ன் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
நகல்–

1. பள்ளிக் கல்விஇயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக
   பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக
3. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்
4. தலைமையாசிரியர்கள்,
   அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)
5. பள்ளித் துணை ஆய்வாளர்கள்
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம்)
   (சார்ந்த அலுவலர் மூலமாக)